வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 82

16 வியாழக்கிழமை பெப்ரவரி 2023 | மாசி 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

விலை ரூ. 50 –
பக்கங்கள் 12

## மின்கட்டணச் சர்ச்சை

# 65% உயர்வுக்கு நேற்று அனுமதி!

கொழும்பு, பெப்ரவரி 16

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் நேற்றுமுதல் மின்கட்டணத்தை 65 வீதமாக உயர்த்துவதற்குப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்தப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், ஏனைய மூன்று உறுப்பினர்களின் இணக்கப்பாடு காரணமாக பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

11

## மின்கட்டண அதிகரிப்பு; நீதிமன்றை நாடுவேன்

### பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 16

ஆணைக்குழுவின் தலைவர் என்ற ரீதியில், எனது அனுமதி இல்லாமல் அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியில் மின்கட்டணத்தை அதிகரித்துள்ள

11

## 4 பொலிஸாருக்கு மரண தண்டனை!

கொழும்பு, பெப். 16

நபர் ஒருவரை சுட்டுக்கொன்ற வழக்கில் குற்றவாளிகள் எனநிரூபிக்கப்பட்ட நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு அம்பாந்தோட்டை நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

2005ஆம் ஆண்டு திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட

11

## அடுத்த போகத்தின் போது குறைந்த விலையில் உரம்!

### விவசாய அமைச்சர் வாக்குறுதி

கொழும்பு, பெப். 16

எதிர்வரும் போகத்தின்போது விவசாயிகளுக்கு சந்தை விலையை விடவும் குறைந்த விலையில் உரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

11

## மனித உரிமை ஆணைக்குழுவினர் வடக்குக்கு இன்று பயணம்

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தலைமையிலான குழுவினர் இன்று வடமாகாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

11

## அடிகாயத்துக்கு உள்ளாகி ஒருவர் மருத்துவமனையில்

### இராணுவ உடையில் வந்தோர் அராஜகம்

கிளிநொச்சி, பெப். 16

கிளிநொச்சி- தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில், முகமூடி அணிந்து இராணுவச் சீருடையில் வந்தோர் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

11

## இலங்கைக் கடற்பரப்பை பாதுகாக்க உதவுங்கள்!

### மிலிந்த மொறகொட கோரிக்கை

கொழும்பு, பெப். 16

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட, இலங்கையின் கடல் சார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவுமாறு வெளிநாட்டுப்

11

## யாழ். போதனாவில் பலருக்கு சுகவீனம்!

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பலருக்கு திடீர் உடநலக் குறைவு ஏற்பட்டுள்ளது. மருத்துவமனையின் பணியாளர்கள் மற்

11

## தலைசுற்றென சென்றவர் சிகிச்சை பயனின்றிச் சாவு!

வவுனியா, பெப். 16

வவுனியாவில் வேலைத்தளத்தில் உடல் சோர்வடைந்து தலை சுற்றுகின்றது என்று மருத்துவமனைக்குச் சென்றவர், சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

வவுனியா உள்ளூளாங்குளம் பகுதியைச் சேர்ந்த முருகன் சந்திரலிங்கம் (வயது -60) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பாரவூர்தி ஒன்றின் திருத்த வேலை செய்துகொண்டிருந்த

11



## மார்ச் மாதம் முதல் கடன் மறுசீரமைப்பு!

### ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, பெப். 16

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மார்ச் மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இலங்கைக்கு கடனுதவி வழங்குவதற்கு, கடன் மறுசீரமைப்புத் தொடர்பான

11

## இந்திய மீனவர்களுக்குப் 'பாஸ்' வடக்கில் விரைவில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16

வடமாகாண மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நிலையில், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க ஏதுவாக பாஸ் நடைமுறையைக் கொண்டுவந்தால் அரசாங்கத்துக்கு எதிராகவும் துறைசார் அமைச்சருக்கு எதிராகவும் வடமாகாணத்தில் பெரும் போராட்டத்தை மேற்கொள்வோம் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விலை அதிகரிப்பால்

# எரிபொருள் கொள்வனவு 30 சதவீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 16
எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளைப் பெற வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளது என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



எரிபொருளின் விலை அவ்வப்போது அதிகரித்து வருவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.
மேலும் கியூ.ஆர் குறியீடு முறைப்படி, ஒரு வாரத்துக்குத் தேவையான அளவு எரிபொருளை பெறுவதற்குக் கூட நுகர்வோர் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக எரிபொருள் விலை அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-14-இ)

## கூட்டுறவு பணியாளருக்கு சிவராத்திரிக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், பெப். 17
வடக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மகா சிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## மீள எரிபொருள் தட்டுப்பாடு?

# மக்கள் வங்கிக் கணக்கு பதிவுகள் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப்.16
பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விநியோகஸ்தர்களால் மக்கள் வங்கியில் வைப்பிலிடப்படும் பணத்தின் கணக்குப் பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இந்தக் கணக்குப் பதிவுகள் ரத்துசெய்யப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
மக்கள் வங்கியின் கணக்கில் பணத்தை வைப்பிலிடும் விநியோகஸ்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படமாட்டாது என சப்ரகமுவ பிராந்திய முகாமையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. பணம் செலுத்தப்பட்டபோதும் விநியோகஸ்தர்களுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.
இதன்காரணமாக நாட்டில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்படும் என எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் மக்கள் வங்கியின் தலைவருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்டத்துக்கும் தெரியப்படுத்தி தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சிறுபோகச் செய்கை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் ரி.எஸ்.பி உரம்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16
எதிர்வரும் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு சந்தை விலையை விடக் குறைந்த விலையில் ரி.எஸ்.பி உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி ஊடகப்பிரிவால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
விவசாயிகள் ரி.எஸ்.பி உரங்களை பயன்படுத்துவதைக் குறைத்தமையே பயிர் மஞ்சள் நிறமாக மாறுவதற்கு முக்கிய காரணம் என விவசாயத்திணைக்களம் கண்டறிந்துள்ளதுடன், எதிர்வரும் சிறுபோகத்தில் இந்த நோய் வராமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
அதன்போது எதிர்வரும் சிறுபோகத்தில் ரி.எஸ்.பி உரங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் பெரும்போகத்தை விடக் குறைந்த விலையில் உர வகைகளைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை விவசாயிகளுக்கு வழங்குவதன் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்பட்டது.
விவசாயிகள் குறைந்த செலவில் உற்பத்தியைப் பெருக்க [illegible]யில் மண்ணுக்குத் தகுந்த பயிர் வகைகளையும், தகுந்த விவசாய உள்ளீடுகளையும் விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்தால், உள்ளீடுகளுக்கு ஏற்ற விளைச்சலை விவசாயிகள் பெறமுடியும் என உர நிறுவன பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.
சவால்களுக்கு மத்தியிலும் கூட சந்தை தேவையை விட அதிக விளைச்சலை கடந்த போகங்களில் விவசாயிகள் பெற்றுக்கொடுத்துள்ளனர்.
எனவே, எதிர்வரும் சிறுபோகச் செய்கை விவசாயிகளுக்கு சந்தை விலையை விடக் குறைந்த விலையில் ரி.எஸ்.பி உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று [illegible]ள்ளது. (ஒ-14)

# கனேடிய தமிழர்களுடன் கலந்துரையாட விரும்புகிறோம்

## அந்த நாட்டு அரசின் உதவியை எதிர்பார்க்கிறது இலங்கை

ரொரன்டோ, பெப். 16
கனடாவுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கனடா கொண்டு வந்த தீர்மானமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளதாக இலங்கை கருதுகிறது. இதனால் கனடாவுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. கனடாவுக்கான இலங்கைத்தூதுவர் ஹர்ஷ குமார நவரட்ணே இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.
கனடாவிலுள்ள இலங்கைத்தூதரகத்தில் நடைபெற்ற 75 ஆவது சுதந்திரதின நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், நாங்கள் வெளிநாடுகளிலுள்ள எமது தமிழ் சகோதர சகோதரிகளுடன் நல்லுறவைப்பேண விரும்புகிறோம். இதற்காக கனடாவின் உதவியை நாடுகிறோம். கனடாவின் உதவியின்றி எம்மால் இதைச் செய்ய முடியாது. இதற்காக கனடாவுடன் இரு பக்க புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.
புதிய அரசாங்கம் பொருளாதார உறுதிப்பாடு, நல்லிணக்கம் போன்றவற்றில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.
கனேடிய பிரதி வெளிவிவகார அமைச்சர் சிண்டி ரெமெய்சின் தனது பதிலுரையில், இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கையை அங்கீகரித்த நாடுகளில் கனடாவும் ஒன்று. இப்போது இலங்கை தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. அண்மையில் செய்து கொள்ளப்பட்ட இந்தோ- பசுபிக் ஒத்துழைப்பு தந்திரோபாய நடவடிக்கைகளில் கனடா முக்கிய மாகப் பங்காற்றுகிறது.
கடந்த 25 வருடங்களாக இலங்கையின் பாரம்பரிய அம்சங்கள் பல கனேடிய கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளன. இப்போது கால நிலை மாற்றம் போன்ற பல கொந்தளிப்பான நிலைமைகளை உலகம் எதிர்கொண்டுள்ளது. இலங்கை தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுத்துள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கைக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு கனடா தயாராகவுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து இலங்கை விரைவில் மீளும் என நாங்கள் நம்புகிறோம். உண்மையான மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டுமென அவர் தனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

# யாழில் வேகமெடுக்கும் காலபோக அறுவடை!

யாழ்ப்பாணம், பெப். 16
யாழ்.மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடைப் பணிகள் துரிதகதியில் இரவு வேளைகளிலும் இடம்பெற்று வருகின்றன.
மாத இறுதியில் மழைபெய்யலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அறுவடைப் பணிகள் விவசாயிகளால் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன.
குறிப்பாக வலி.கிழக்குப் பிரதேசங்களில் இந்த நெல் அறுவடைப் பணிகள் மும்முரமாக இடம்பெறுகின்றன.
இதேவேளை இருவாரங்களுக்கு முன் நிலவிய சீரற்ற காலநிலை பெரும்போக நெல் அறுவடைப் பணிகளில் கடுமையான தாக்கத்தைச் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியதர வர்க்க காணிகளில்

## குடியிருப்போருக்கு விரைவில் காணி ஆவணங்கள் கையளிப்பு

வவுனியா, பெப். 16

வவுனியாவிலுள்ள மத்தியதர வர்க்க காணிகளில் குடியேறியிருப்போருக்கு அந்த நிலங்களை அவர்களுக்கே உரித்தாக்குவதற்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் போர் இடம்பெறுவதற்கு முன்னர் மத்திய தர வர்க்கத்தினருக்கு விவசாய தேவைகளுக்காக காணிகள் வழங்கப்பட்டிருந்தன.

அதில் ஏராளமான நிலங்கள் அவர்களால் கைவிடப்பட்டிருந்த நிலையில் போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறி வாழ்வாதாரப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயினும் அவை மத்தியதர வர்க்கத்துக்கு வழங்கப்பட்ட காணிகள் எனத் தெரிவித்து குடியேறியுள்ள மக்களுக்கு ஆவணங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கடந்த பல வருடங்களாக அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும் முன்னேற்றங்கள் எவையும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில் இந்தக் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன்.

விரைவில் ஆவணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலாளரால் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் மக்களின் காணி ஆவணப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் - என்றார். (ச-18)

நிதிச் சிக்கலைத் தீர்க்க

# தேர்தல்கள் ஆணைக்குழுவால் நிதியமைச்சருக்கு அழைப்பு

கொழும்பு, பெப்.16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்டுள்ள நிதியொதுக்கீடு இதுவரை வழங்கப்படாமை தொடர்பில் கலந்துரையாடி தீர்வை எட்டுவதற்கு நிதியமைச்சின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் கடிதம் ஒன்று நேற்று அனுப்பப்பட்டு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த 300 மில்லியன் ரூபா அவசியம். எனினும், இதுவரை 100 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளுக்காக 400 மில்லியன் ரூபா அவசியம் என அரச அச்சக தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த நிதியில் 40 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் 360 மில்லியன் அவசியமாகவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டாலும் விநியோகப் பணிகளுக்கு 3, 4 நாள்கள் தேவைப்படும்.

எதிர்வரும் மார்ச் 9 திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளில் ஏற்பட்டுள்ள தடங்கல் தாக்கம் செலுத்தும்.

தேர்தல் பணிகளுக்கான நிதியொதுக்கீடு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு எட்டப்பட வேண்டும்.

நிதி அமைச்சின் செயலாளருடனான கலந்துரையாடல் மூலம் இந்தச் சிக்கல் நிலையைத் தீர்க்க முடியும் என நம்புகிறோம் - என்றார். (ச-இ)



## மருத்துவர் சிவரூபனுக்கு மகத்தான வரவேற்பு

பளை, பெப். 16

பளை பிரதேச மருத்துவமனை அத்தியட்சகராக கடமையாற்றியபோது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட மருத்துவர் சின்னையா சிவரூபனுக்கு, பளை மருத்துவமனையில் மக்களால் நேற்று மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

அவர் நேற்றையதினம் கடமைகளைப்பொறுப்பேற்கச் சென்றபோதும், அவருக்குரிய கடிதம் சுகாதார அமைச்சின் செயலாளரால் இன்னமும் வழங்கப்படாமையால் பொறுப்பேற்கவில்லை. (ஒ-113)

ஈழத்துச் சிதம்பர உற்சவ விவகாரம்

## போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸ்மா அதிபரிடம் முறையீடு

யாழ்ப்பாணம், பெப். 16

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவெம்பாவை உற்சவத்தை நடத்துமாறு கோரி மேற்கொள்ளப்பட்ட அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டோர் வீட்டை தீயிட்டு எரிக்க முயன்றனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் உடன் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

காரைநகர் சிவன் கோவில் திருவெம்பாவை உற்சவத்தைநடத்தாது பாலஸ்தாபனம் செய்வதற்கு ஆலய நிர்வாகத்தினரால் திட்டமிடப்பட்ட நிலையில் திருவிழாவை வழமை போன்று நடத்துமாறு கோரி உபயகாரர்களால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் பாலஸ்தாபனம் செய்வதற்கு நீதிமன்று இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்தது.

அந்தவகையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவெம்பாவை உற்சவத்தை நடத்துமாறு கோரி பக்தர்கள் ஒன்றுகூடி கடந்த டிசெம்பர் மாதம் ஆலயத்தை நோக்கி அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளரிடம் மனுவை கையளிக்க முற்பட்டவேளை அவர் வீட்டில் இல்லை என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து ஆலய வாயிலில் மனுவை வைத்துவிட்டு போராட்டம் நிறைவுற்றது.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 13 பேர் தனது வீட்டை எரிப்பதற்கு முயற்சித்துள்ளனர் ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பேரணியில் கடமையில் தாமும் இருந்தோம் எனவும் அவ்வாறான அசம்பாவிதம் நடைபெறவில்லை எனவும் கூறி பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட வில்லை.

அதனையடுத்து ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் இது குறித்து பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு வழங்கிய நிலையில் இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை வழங்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

## யாழ்.வருகிறார் அநுரகுமார

யாழ்ப்பாணம், பெப்.16

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கா நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் பரப்புரைக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.


கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

# ரூ.88 முதல் ரூ.100 வரையில் 'நாடு' நெல் கொள்வனவு

மன்னார், பெப். 16

மன்னார் மாவட்டத்தில் 'நாடு' இன நெல்லை நிபந்தனையின் அடிப்படையில் 88 ரூபா முதல் 100 ரூபா வரையில் விவசாயிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நெல் அறுவடைக்கான நியாயமான விலையை விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் 2022/2023 பெரும்போக அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 9 ஆம் திகதிய



சுற்றுநிருபத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மன்னார் மாவட்டத்தில் 'நாடு' இன நெல்லை மட்டும் நிபந்தனை அடிப்படையில் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆகக் கூடிய ஈரப்பதன் 14 வீதம் மற்றும் ஆகக் கூடிய நெற்பதரினளவு 9 வீதம் உடைய நாடு நெல் 100 ரூபாவுக்கும், ஈரப்பதன் 14 வீதத்துக்கு அதிகமான மற்றும் 22 வீதத்துக்குக் குறைந்த நாடு நெல் 88 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் நெல்லை வழங்குவதற்குத் தயாராகவுள்ள விவசாயிகள் இது தொடர்பான விவரங்களை கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்டக் காரியாலயத்துக்கு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-14,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையான 28 பேருக்கு புனர்வாழ்வு

யாழ்ப்பாணம், பெப். 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த 2022ஆம் ஆண்டு முதல் இவ்வருடம் வரையான காலப்பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 28 பேர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளணர் என மானிப்பாய் பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த வருடம் 22 இளைஞர்கள் மருத்துவ பரிசோதனைகளுக்கு அமைவாக உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையானவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டது.

நீதிமன்ற அனுமதியோடு அவர்கள் கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 28 இளைஞர்கள் இவ்வாறு நீதிமன்றினூடாக புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)



# பிரெஞ்சு தூதுவரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கொழும்பு, பெப். 16

இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், கொழும்பில் உள்ள தூதரகத்தில் கடந்த திங்கட்கிழமை சந்தித்தனர்.

சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நாட்டின் தற்போதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டன. (ஒ-14,20)

# சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுகம்



யாழ்ப்பாணம், பெப்.16

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கருத்தமர்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் சஜின் வாஸ் குணவர்த்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் உதவித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-27)

# உடைமையில் ஹெரோய்ன்; சுதுமலையில் நால்வர் கைது

யாழ்ப்பாணம், பெப்.16

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது சுதுமலை ஈஞ்சடி வைரவர் ஆலயத்தின் அருகாமையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களின் உடைமையிலிருந்து 260 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. 23 வயதுடைய இருவரும் 21, 32 ஆகிய வயதுடையவர்களுமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப். 16

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் சிவ வாரத்தை முன்னிட்டு கீரிமலை குழந்தைவேல் சுவாமி சமாதி சிவாலய சைவ அறப்பணி மையத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை குருதிக்கொடை இடம்பெறவுள்ளது. சிவராத்திரியை முன்னிட்டு சைவ மகாசபை ஏற்பாட்டில் வருடாவருடம் உயிர்காக்கும் குருதிக்கொடை இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய யாழ்ப்பாண போதனா மருத்துவமனை குருதி வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு குருதிக்கொடையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-14)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர் பான முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவு களும் ஏற்படக்கூடும். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர் பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். வழிபாடு அமைதி தரும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் செலவுகளிலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். வாய்ப்பு கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மகிழ்ச்சி வரும்.

அண்மையில் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் - நவாலி தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 136 ஆண்டுகளில் முதல் தடவையாக மாணவி ஒருவர் புலமைப்பரிசில் வெட்டுப் புள்ளியைத்தாண்டி சித்திபெற்றுள்ளார்.

ரூபன் தஸ்வினா என்ற மாணவியே 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (ய-63)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மாற்றுத் திட்டம் என்ன?

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படும் அல்லது கைவிடப்படும் நிலைமையே விரைவில் ஏற்படும். அதற்கான சூழலே தென்படுகின்றது. இந்த நிலையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டங்கள் எதுவும் தேர்தல்கள் ஆணைக்குழுவசம் இருப்பதாகத் தெரியவில்லை. நிதி விடுவிக்கப்படவில்லை என்பதைச் சொல்வதைத்தவிர, தேர்தலை நடத்தி முடிப்பதற்கான எந்தவொரு திட்டங்களையும் தேர்தல்கள் ஆணைக்குழு கைவசம் வைத்திருக்கவில்லை என்பதும் வெளிச்சமாகிறது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரச தரப்புக்கு குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு துளியளவும் விருப்பமில்லை. ரணிலைப் பொறுத்தவரையில் இலங்கையில் இனி ஒரு தேர்தல் நடந்தால் அது ஜனாதிபதித் தேர்தலாகத்தான் இருக்கவேண்டும் என்பது அவரது எண்ணம். ஜனாதிபதித் தேர்தலில் தான் நேரடியாகக் களமிறங்கி வெல்வதற்கான திட்டங்களையே அவர் வகுத்துக்கொண்டிருக்கின்றார். அதற்குமுன்னர் எந்தவொரு தேர்தலையும் நடத்தி, தனது கையைச் சுட்டுக்கொள்வதற்கு அவர் தயாரில்லை, இது வெட்டவெளிச்சமானது. கடந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தல்கள் ஆணைக்குழுவினரை நேரடியாக அழைத்து உதவியாளர்கள் எவருமின்றி தனித்துச் சந்தித்திருந்தார். உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவேண்டாம் என்று அவர் நேரடியாகக் கூறவில்லையேயொழிய அதை மறைமுகமாக, வெவ்வேறான சங்கேத வெளிப்பாடுகள் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழுவினருக்கு எடுத்தியம்பியிருக்கின்றார்.

அதற்குப் பின்னர் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்தது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் அவரது அரசாங்கத்துக்கும் சவால் விடுத்துக்கொண்டு தேர்தலை நடத்திக்காட்டுகின்றோம் என்ற நிலைப்பாட்டை தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்தது. மக்களாட்சியைக் காப்பதற்காக–அவர்களின் வாக்குரிமையை நிலைநாட்டு வதற்காக தேர்தலை நடத்தும் முடிவை ஆணைக்குழு எடுத்ததை வரவேற்கலாம். அதேவேளை, ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பகைத்துக்கொண்டு தேர்தலை நடத்த முடியுமா என்பதை அவர்கள் யோசித்துப் பார்த்திருக்கவேண்டும். பகைத்துக்கொண்டு நடத்துவதானால் எவ்வாறான முட்டுக்கட்டைகள் ஏற்படும் என்பதையும், அதை எப்படி வெல்வது என்பதையும் தெரிந்துகொண்டு களமிறங்கியிருக்கவேண்டும்.


ஆகக் குறைந்தது அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் பகைத்துக்கொண்டு தேர்தலை நடத்துவதென்றால், அரசாங்கத் திணைக்களங்களையாவது அரவணைத்துச் செல்வதற்குரிய யுக்திகளை வகுத்திருக்கவேண்டும். வழக்குகளுக்குச் செல்வதற்கு சட்டமாஅதிபர் திணைக்களத்தின் உதவி தேவை என்பதை உணர்ந்திருந்தால் அதற்குரிய வகையில் அவர்களுடன் அனுசரித்துச் சென்றிருக்கவேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதன் தலைவரது சில நடவடிக்கைகளாலேயே சட்டமாஅதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் மன்றில் முன்னிலையாக மறுப்புத் தெரிவித்திருக்கின்றது. இப்படியெல்லாப் பக்கமும் இடியப்பச் சிக்கலை உருவாக்கிவிட்டு, தேர்தலை நடத்த முடியும் என்று எப்படி தேர்தல்கள்ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது? இந்தத் தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதற்கு இதுவரையில் எந்தவொரு தேர்தலையும் நடத்தவில்லை. அவர்கள் நடத்த முற்பட்ட முதலாவது தேர்தலே இப்படி கோணல்மாணலாகியிருக்கின்றது. கடந்த காலங்களில் தேர்தல்களை நடத்திய அனுபவமிக்கவர்கள் பலர் தேர்தல்கள் திணைக்களத்தில் இருக்கின்றார்கள். ஏன் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருக்கும் மொஹமட் கூட, கடந்த காலங்களில் தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து பல தேர்தல்களை நடத்தியவர். அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகளை உள்வாங்கிச் செயற்பட்டிருந்தால்கூட இப்படி முட்டுச் சந்தில் வந்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு அரச அச்சகத்துடன் இணக்கமான பேச்சு நடத்தப்பட்டிருந்தது. அரச அச்சகமும் படிப்படியாக வாக்குச்சீட்டை அச்சிட்டு வழங்க இணங்கியிருந்தது. ஆனால், தேர்தல்கள் ஆணைக்குழுவில் தேர்தல்கள் திணைக்களத்தின் ஒரு சிலரின் எதேச்சாதிகார நடவடிக்கையால், அரச அச்சகம் தனது முடிவை மாற்றிக்கொண்டது. இப்போது தேரை இழுத்து தெருவில் விட்ட கதையாக எல்லாம் முடிந்திருக்கின்றது. இனி என்னசெய்யப்போகிறது தேர்தல்கள் ஆணைக்குழு?

### நாளொரு நல்வார்த்தை

"நாம் எவ்வளவு அதிகமாகக் கற்றுக் கொள்கிறோமோ, நாம் அவ்வளவு அதிகமாக நம் அறியாமையை அறிந்து கொள்கிறோம்"

– பெர்சி பைஷ் ஷெல்லி



## தேர்தலை ஒத்திவைக்க முயல்வது வாக்களிப்பு உரிமையை மீறும் செயல்

### தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் கண்டனம்

கொழும்பு, பெப். 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வாக்காளர்கள் மத்தியில் தேர்தல் தொடர்பான நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவதுடன் இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்ட அனைத்துக் குடிமக்களின் வாக்களிக்கும் உரிமையை நேரடியாக மீறுவதாக அமையும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதொன்று.

இவ்வாறு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடல், தேர்தல் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளால் தபால் மூல வாக்கெடுப்பு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடனடிப்படையில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என அரச நிறுவனத் தலைவர்களுக்கு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட வழிகாட்டலால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு இந்த தபால்மூல வாக்கெடுப்புக்கு ஏற்பட்டுள்ள இடையூறு தாக்கம் செலுத்தும்.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் வாக்காளர்கள் மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தும். அனைத்துக் குடிமக்களின் வாக்களிக்கும் உரிமையை நேரடியாக மீறுவதாக இது அமையும்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க அனைத்து அரச நிறுவனங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

## சிங்கள மொழியில் நீதிமன்றக் கட்டளை தமிழில் வழங்குமாறு மீளக் கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

நீதிமன்றத்துக்கு வருகை தருமாறு சிங்கள மொழியில் அழைக்கப்பட்ட கட்டளையை தமிழில் வழங்குமாறு தெரிவித்து பொலிஸாரிடம் மீளக் கையளித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நீதிமன்றம் வருகை தருமாறு பொலிஸ் கட்டளையொன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

அந்தக் கட்டளை சிங்கள மொழியில் மாத்திரம் காணப்பட்டதன் காரணமாக சிங்கள மொழி தனக்கு வாசிக்கத் தெரியாது எனவும் ஆதலால் இந்தக் கட்டளையைத் தன்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் கட்டளையை தமிழ்மொழியில் வழங்குமாறும் தெரிவித்து பொலிஸார் வழங்கிய கட்டளையை மீள அவர்களிடம் கையளித்தார்.

அதன்பின்னர் பொலிஸார் கட்டளையை தமிழில் மொழிபெயர்த்து சிறீதரன் எம்.பி.யிடம் வழங்கினர்.

(ஓ-14)

நாளை 17.02.2023 வெள்ளிக்கிழமை மாசி 05

சுபநேரம் : 06.33 - 08.03

ராகுகாலம் : 11.03 - 12.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் அமைக்கப்படும்

# கடலட்டைப் பண்ணைகள் இயற்கையைப் பாதிக்கும்

### வடமாகாண கடற்றொழில் இணையத்தின் இணைப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 16

விஞ்ஞான ஆய்வின்படி வடபகுதியில் கடலட்டைப் பண்ணைகள் அமைப்பது இயற்கை வளத்தைப் பாதிக்கும். இவ்வாறு வடமாகாண கடற்றொழில் இணையத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடலட்டைப் பண்ணையால் பாதிக்கப்படும் வடமாகாண மீனவ பிரதிநிதிகளை உள்ளடக்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

கலந்துரையாடலில் கடலட்டைப் பண்ணை மீனவர்களுக்கு சாதகமானதாகவோ அல்லது பாதகமானதாகவோ இருக்கின்றது என்பது தொடர்பில் ஆராய்ந்து இருந்தோம்.


ஒட்டுமொத்த விஞ்ஞான பூர்வமான கருத்தின்படி இலங்கைக் கடற்பரப்புக்குள் குறிப்பாக வடபகுதியில் அட்டைப்பண்ணை உருவாக்குவது ஒரு முறையற்ற விடயமாக அது மீனவர்களுடைய எதிர்கால வாழ்வைப் பாதிக்கின்ற ஒரு விடயமாக உள்ளது.

வடபகுதியிலே மேற்கொள்ளப்படுகின்ற அட்டைப் பண்ணைகள் பாரம்பரிய மீன்பிடி முறைக்கு எதிரானதாகவும் இயற்கை வளங்களை அழிக்கின்றதாகவும் மீன்கள் புலம்பெயரும் இடங்களை தடுக்கின்றதாகவும் காணப்படுகிறது.

தொடர்ச்சியாக இலங்கையின் வடபகுதியில் 17 விதமான அட்டைகள் காணப்படுகின்றன.

அட்டைகள் அழிக்கப்படுவதற்கு இந்த அட்டைப் பண்ணைகள் ஒரு காரணமாக இருக்கின்றன.

எனவே, இதுதொடர்பாக அமைச்சரும் ஏனைய கடற்றொழில் நிறுவனங்கள், கடற்றொழில் பரிசோதகர்கள் ஆழமான ஆய்வை மேற்கொண்டு உடனடியாக இந்த அட்டைப் பண்ணைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஒ-14)



# புளுக்கொடியல் விற்பனை சூடு!

சாவகச்சேரி, பெப்.16

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் ஒடியல் மற்றும் புளுக்கொடியல் விற்பனை சூடுபிடித்துள்ளன என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்தவருடம் மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்பட்டபோதிலும் பாத்திகளிலிருந்து பிடுங்கப்படும் கிழங்குகள் ஒடியல்களாகவும் புளுக்கொடியல்களாகவும் சந்தைகளுக்கு அதிகளவில் எடுத்து வரப்படுகின்றன.

சந்தைகளில் ஒடியல் கிலோ 400 ரூபாவாகவும் புளுக்கொடியல் கிலோ 800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

# மருதடி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 16

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு ஆலய மஹோற்சவ உபயகாரர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கும் மஹோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் முற்பகல் 10.30 மணிக்கும் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறும் என்று சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (ஒ-14)

## 2021 வீட்டுத் திட்டப் பயனாளர்களுக்கு

# இறுதிக் கொடுப்பனவு இழுத்தடிக்கப்படுகிறது

சாவகச்சேரி, பெப்.16

யாழ்.மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு இதுவரை நான்காம் மற்றும் இறுதிக்கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று பயனாளர்கள் தெரிவித்தனர்.

2021 ஆம்ஆண்டு நிரந்தர வீடு இல்லாத மூன்றும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபா வீட்டுத்திட்டமும், ஒன்று, இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு தலா 6 லட்சம் ரூபா வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டது.

வீட்டுத்திட்டத்துக்கான கொடுப்பனவுகள் பிரதேசசெயலக தொழில்நுட்ப அலுவலரின் பரிந்துரைக்கமைய வழங்கப்பட்டன.

வீட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தொழில்நுட்ப அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ள போதிலும் இதுவரை நான்காம் மற்றும் இறுதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் வேலையைப் பூர்த்திசெய்யப் பெற்ற கடனை மீளச் செலுத்தமுடியாமல் உள்ளது என்று பயனாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதேசெயலகங்களுடன் தொடர்புகொண்ட போது வீட்டுத்திட்டப் பயனாளர்களுக்கான கொடுப்பனவு நிதி உரிய திணைக்களத்தால் இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும், நிதி அனுப்பி வைக்கப்பட்டதும் பயனாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் தெரிவித்தனர். (ஒ-14-9)



எதிர்வரும் சிவராத்திரியை முன்னிட்டு, சிவலிங்கங்கள் மலை முழுவதும் அலங்கரித்துக் காணப்படும் தென்கையிலை ஆதீனத்தில் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் திருக்கோணமலை வளாக இந்துமாமன்றத்தைச் சேர்ந்த இளையோர் ஒன்றிணைந்து சிரமதானப் பணியை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர். (ஒ-14-125)

# 'மண்டோஸ்' புயலால் பாதித்தோருக்கு நிதி

சாவகச்சேரி, பெப்.16

தென்மராட்சிப் பிரதேசத்தில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட மேலும் ஒரு தொகுதியினருக்கு முதற்கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு அந்தந்த பிரதேச செயலகத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வங்கிக்கணக்கில் இடப்படவுள்ளது.

இடர்கால முகாமைத்துவத் திணைக்களத்தால் ஏற்கனவே மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 17 குடும்பங்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் வீதம் வழங்கிவைக்கப்பட்டது.

கச்சாய், மந்துவில் வடக்கு, கரம்பைக்குறிச்சி, கோவிலாக்கண்டி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு [illegible] கட்டமாக வழங்கப்படுகின்றது. (ச-9)



# திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி ஒழுங்குகள்பற்றி கலந்துரையாடல்

மன்னார், பெப். 16

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மஹா சிவராத்திரி நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் மன்னார் மாவட்டச்செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அரச, தனியார் போக்குவரத்துகள், குடிதண்ணீர், சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் ஆராய்ப்பட்டன. அத்துடன் பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட விடயங்களும் ஆராயப்பட்டு அதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டன.

திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு இம்முறை நாடளாவிய ரீதியில் பல பகுதிகளிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையிலே ஆலயத்தில் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம், துறைசார் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஒ-14-56)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈரவிழிகளுடன்

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் செல்லையா சுப்பிரமணியம்

(ராஜ்மணி - ஆச்சாரியார்)

திதி: துவாதசி



மலர்வு : 15.05.1944
உதிர்வு: 12.02.2018

ஆண்டுகள் ஐந்து
மின்னலென மறைந்தாலும்
எமை ஆளாக்கியவரது பிரிவுத்துயர்
அணையாது என்றுமே..

எம் மனதில் வீசும் காற்றினிலும்
நாம் விடும் மூச்சினிலும் எட்டு
திக்குகளிலும் உம் நினைவால்
வாடுகிறோம் அப்பா! உம் இழப்பை
ஈடு செய்ய முடியாமல்
தவிக்கின்றோம் மீண்டும் பிறந்து
வருவீரா எம் அன்பு அப்பாவே!

எங்களுக்கு வாழ வழிகாட்டிய
எங்கள் அப்பா எம் தேவைகள்
அனைத்தையும் நிறைவேற்றி
விட்டு எம்மை விட்டு போக
உங்களுக்கு எப்படி மனசு வந்தது
அப்பா? எமக்காக ஒரு முறை
வாருங்கள் அப்பா!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!**

அன்னாரின் ஐந்தாம் ஆண்டு ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று (16-02-2023) வியாழக்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

**குடும்பத்தினர்.**

# பெயர் மாற்றம்

சிதம்பரநகர் வவுனியாவில் வசிக்கும் **தங்கராஜா** (Thangarajah) ஆகிய நான் எனது பெயரை **ரெங்கராஜ்** (Rengaraj) என மாற்றம் செய்வதோடு. இனிவரும் சகல ஆவணங்களிலும் **ரெங்கராஜ்** (Rengaraj) என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**ரெங்கராஜ்** (Rengaraj)

(cs 23374) (2.6)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப. 16

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வசாவிளான் பகுதியில் ஆயிரத்து ஐந்நூறு மில்லிலீட்டர் கசிப்புடன் 45 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.


குறித்த சந்தேகநபர் வீதியால் கசிப்பைக் கொண்டு சென்றவேளை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

# மரண அறிவித்தல்

## பொன்னுச்சாமி கோபாலகிருஷ்ணன்

(ஆங்கில ஆசிரியர்)

பிறப்பு 22.11.1942 — இறப்பு 15.02.2023



தெல்லிப்பழை டச்றோட் வீமன்காமத்தினை பிறப்பிடமாகவும் சுழிபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கோபாலகிருஷ்ணன் நேற்று (15.02.2023) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கணேசன், தில்லைத்திருமகள், சொக்கநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், உஷாதேவி, சிவகுமாரன், சிவகணேசசுந்தரன் (ஓய்வுநிலை அதிபர்), காலஞ் சென்ற சிவராமன், அமிர்தவேணி, கோமளாஅம்பிகை ஆகியோரின் மைத்துனரும், ஐஸ்வரியா (விரிவுரையாளர்), சங்கர், நிரந்தரி, சுதந்தரி, சிவானந்தி (HNB), சிவமதுரன், சிவலோஜினி, அபிநாஷ் ஆகியோரின் சித்தப்பாவும், சிவமனோகரி, வாணி, விமலன், யமுனா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சைந்தவியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை சுழிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சங்கர்**
**077 731 1158**
**ஐஸ்வரியா**

(cs 23457) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 12 . 1943 — மறைவு 15 . 02 . 2023



## சண்முகம் கனகசுந்தரம் (கணேஸ்)

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் தற்போது சேவா லங்கா சந்தி, தவசிகுளத்தில் வசித்தவருமாகிய சண்முகம் கனகசுந்தரம் (கணேஸ்) அவர்கள் நேற்று (15.02.2023)) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா தையல்முத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சிவகுமார், சிவராசா (ராசன் பிள்ளையார் ஸ்ரோர்ஸ்- பண்டாரிகுளம்), சிவபாலன் ( கலா சென்ரர்), சிவரஞ்சினி (அவுஸ்திரேலியா), சிவகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணசுந்தரி, சர்மிளா, கோபிகா, ஜெகன் ( அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற திவாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், அபி, நதுனன் (வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ரிதன்யா, பிரவிந், ஹாசினி, ஹாரிஸ், லக்ஷன்யா (வ/சைவப்பிரகாச மகளிர் பாடசாலை), வர்ஷாந் (வ/ தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தசாமி (M.L.T கனடா), பாலாமணி (கனடா), கனகலிங்கம் (K.K. வவுனியா), அருளானந்தம் ( கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் தவசிகுளம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**0766090896 - ராசன்**
**0761592010 - பாலன்**

**தகவல்: குடும்பத்தினர்.**

(C10841-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 04 - 1944 — மறைவு 15 - 02 - 2023



## சேனாதிராசா சண்முகராசா-(ஓமான் அங்கிள்)

(முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் ஓமான் மற்றும் வருணன் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு.சேனாதிராசா சண்முகராசா நேற்று (15.02.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவியின் கணவரும், காலஞ்சென்ற சற்குணராஜா மற்றும் சதாயினிமலர்(கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அரிச்சந்திராகாந்தனின்(கனடா) அன்பு மாமனாரும், ஹர்சினி(கனடா), கிஸ்சன்(கனடா), நிஷானி(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசுந்தரராஜா, இராஜேஸ்வரிதேவி மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா(மாவிட்டபுரம்), பாலரஞ்சினி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீபவன்(கனடா), சாரதாதேவி(கனடா), ஜெயதேவி, சாந்தாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தீத்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்-குடும்பத்தினர்.**
**077 7283 706**
**077 1768 026**

**வருணன்,**
**அச்சுவேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21 . 12 . 1953

இறப்பு 17 . 02 . 2022

## அமரர் மார்சலீன்பிள்ளை தோமஸ் சுபேந்திரன்

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விட மாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன்"
(யோவான் 14 : 18)

ஆண்டவர் இயேசுவின் அடியவனாய்
அகமகிழ்ந்து எம்மோடு வாழ்ந்து
பற்றோடும் பாசத்தோடும் எம்மை
பரிவின் கரங்களால் அரவணைத்து
துன்பங்கள் துயரங்கள் மத்தியிலும்
துவண்டிடாமல் செபத்தில் நிலைத்து
இறைபதமடைந்த அன்புறவே
நிலைவாழ்வை நீர் மகிழ்ந்திட
இருகரம் கூப்பி வேண்டுகின்றோம்.

ஆன்மசாந்தித் திருப்பலி நாளை (17.02.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் படியும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்படியும் அன்போடு அழைக்கின்றோம்.

தெணியம்மை வீதி,
வல்வெட்டித்துறை.

(CS/49114)4.6

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 29 . 11 . 1946

இறப்பு 17 . 01 . 2023

## அமரர் வேலுப்பிள்ளை இராமநாதன்

கடந்த 17.01.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாக ஆறுதல் அளித்தவர்களுக்கும் மேலும் பல வழிகளில் உதவிகள் புரிந்து எமது துயரில் தோள் கொடுத்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.84, கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி

(CS/23377)4.6

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 - 02 - 1940

மறைவு 15 - 02 - 2023

## சுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி(ராசா)

(முன்னாள் அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கல்கமுவ)

நாரந்தனை வடக்கு ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும் சிவன் வீதி உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி(ராசா) நேற்று (15.02.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான T.K அப்புத்துரை(பொத்துவில்) பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின்(குஞ்சுபபா) அன்புக் கணவரும், கல்பனா(கனடா), ரமணன்(அவுஸ்ரேலியா), அமரர் ஆதவன்(ஊவா), தக்ஷனா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாமரைச்செல்வன்(குமணன்-கனடா), அபிராமி(அவுஸ்ரேலியா),அபிமன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரினி, ஸ்ருதி, ஆதனா, இளங்குமரன், ஆதுஷன், ஆதிரன், அனனியா ஆகியோரின் பாசமிகு பேரனும், இராமலிங்கம், சிவநாதன், தற்பராதேவி, யோகநாதன், லோகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஶ்ரீதரன், வனிதாமணி மற்றும் செல்வகுமாரி, ஶ்ரீகுமார், சாந்தினி, ஶ்ரீரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64,சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்
075 326 1954(மனைவி)
021 223 0617

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 • 09 • 1947

மறைவு 15 • 02 • 2023

## பொன்னுத்துரை இராசரத்தினம்

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசரத்தினம் நேற்று (15.02.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் செல்லம்மா (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மகாராணியின் (ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர் நாயகம் - வடக்கு வலயம், தற்போதைய நல்லூர் மத்தியஸ்தசபை உத்தியோகத்தர்) அன்புக் கணவரும், ஹிரிதரன், கஜந்தரன், ஹேமாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - காணிப்பதிவகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாசினி, கலைமதி, சமரநாயகம் (ரங்கன்) ஆகியோரின் மாமனாரும், லீலாவதி, சண்முகலிங்கம், கனகாம்பிகை, இந்திராணி, சந்திராதேவி, இந்திரராஜா, லோகேஸ்வரி, சிவகுமார், தர்மசீலன் ஆகியோரின் சகோதரனும், சாயிவிஷால், குபேரா, ஹிரண்ஜாயினி, சிலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/23376)4.6

மகள் - 077 572 2968, மகன் - 077 320 3747,
மருமகன் - 077 618 3283 , மகன் - 074 240 7477

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்தில் நிலநடுக்கம்!



வெலிங்டன், பெப். 16

நியூஸிலாந்தில் நேற்றுச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 அலகுகளாகப் பதிவாகியது.

நியூஸிலாந்தின் தலை நகர் வெலிங்டனுக்கு வடகிழக்குப் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது சுமார் 30 நொடிகள் நீடித்தன. சுமார் 60 ஆயிரம் மக்கள் நிலநடுக்கத்தை உணர்ந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை - என்று நியூஸிலாந்தின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# உதவிகளைப் பெறுவதற்காக எல்லையைத் திறந்தது சிரியா

டமஸ்கஸ், பெப். 16

சிரியாவுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவதற்காக எல்லையில் இரு பகுதிகளைத் திறந்து விடுவதாக அந்த நாட்டு ஜனாதிபதி பஷார் அல் அசாத் அறிவித்துள்ளார்.

சிரியாவில் பூகம்பம் பாதித்த பகுதிகளில் நிவாரண உதவிகளைக் கொண்டுசெல்வதில் சுணக்கம் உள்ளதாக ஐக்கிய நாடுகள்சபை தெரிவித்திருந்தது. மேலும், நிவாரண உதவிகளைப் பெறமுடியாமல் பாதையைத் தடுக்கின்றார் என்று அல் அசாத் மீது சிரியாவில் செயற்படும் தொண்டு நிறுவனங்கள் குற்றச்சாட்டை முன்வைத்தன. இந்த நிலையிலேயே நிவாரணப் பொருள்களை வழங்குவதற்காக துருக்கி - சிரிய எல்லையில் இரண்டு பகுதிகளைத் திறந்து விடுவதாக அல் அசாத் தெரிவித்துள்ளார். அடுத்த மூன்று மாதங்களுக்கு இந்தப் பாதை திறந்திருக்கும். (ம)



# காதலர்தினப் பரிசாக 'சிங்கிள்ஸ்'களுக்கு போனஸ்

மணிலா, பெப். 16

பிலிப்பைன்ஸில் உள்ள ஜெனரல் லூனா நகரத்தின் மேயர், காதலர்கள் இல்லாமல் சிங்கிளாக இருக்கும் ஊழியர்களுக்கு காதலர் தின பரிசாக போனஸ் வழங்கியுள்ளார்.

ஒப்பீட்டளவில் காதலர்கள் இல்லாமல் இருக்கும் ஊழியர்கள் கூடுதலான நேரம் பணிபுரிந்துள்ளனர் என்பதற்காகத்தான் இந்த போனஸை அவர் வழங்கியுள்ளார். குறிப்பாக, 5 ஆண்டுகளுக்கும் மேல் சிங்கிளாக இருக்கும் ஊழியர்களுக்கு தங்களது தினசரி ஊதியத்தை மூன்று மடங்காக உயர்த்தவும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளாராம். (ம)






## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




### அம்பலவாணர் பரமநாதன்

(தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க ஏகாதசி (16.02.2023)

அன்புள்ள அப்பா !

அப்பா என்றழைப்பதை தொலைத்து
பதின்னான்காண்டானது
எப்போ அப்படி அழைப்பது
என்றெண்ணி............

"திருவதிகை"
வேளாவை, அளவெட்டி.

உங்கள் நினைவுடன்
பிள்ளைகள்

(e 23372)(2-6)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்



மலர்வு 23 . 09 . 1937

உதிர்வு 17 . 01 . 2023

கடந்த (17.01.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயார்

### அமரர் செல்லையா பாக்கியம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மடத்தடி வீதி,
கொடிகாமம்,
(வெற்றிலைக்கடை)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய நிதியமைச்சருடன் மொரகொட சந்திப்பு



கொழும்பு, பெப்.16

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் மிலிந்த மொரகொட நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்கான முயற்சிகள் தற்போது எந்தக் கட்டத்தில் உள்ளன என்பது குறித்து இந்திய நிதியமைச்சருக்கு மிலிந்த மொரகொட தெளிவுபடுத்தினார்.

மேலும் இந்தியா துரிதமாகச் செயற்பட்டிருக்காவிடின் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் எனத் தெரிவித்த இலங்கைத் தூதுவர் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கான இந்தியா தக்க தருணத்தில் அளித்த நிதி உத்தரவாதத்துக்கு நன்றியும் தெரிவித்தார். (ச-இ)

# மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

வவுனியா, பெப். 16



செட்டிகுளம் முசல்குத்திப் பகுதியில் மின்சாரம் தாக்கி 30 வயது மதிக்கத்தக்க ஆண் யானை ஒன்று உயிரிழந்துள்ளது. வயல் நிலங்களைச் சூழ கட்டப்பட்ட மின் கம்பியில் சிக்கி காட்டு யானை விழுந்து கிடந்துள்ளது.

அதன்போது அப்பகுதிக்குச் சென்றவர்கள் யானை விழுந்து கிடப்பதை அவதானித்த நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குப் தகவல் வழங்கினர்.

அதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் கால்நடை மருத்துவ அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்குச் சென்று யானையை பார்வையிட்ட போது யானை உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

வயல் நிலங்களுக்குள் வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே யானை உயிரிழந்துள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் யானையின் உயிரிழப்புத் தொடர்பில் கால்நடை மருத்துவ அதிகாரியால் உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஓ-14-18)


## நண்பர்களின் இதய அஞ்சலி



தோற்றம் 08.02.1942

மறைவு 13.02.2023

### வைத்திலிங்கம் தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி)

எமது அன்பு நண்பன் ராஜ்குமார்( R.K. சிங்கம்) அவர்களின் அன்புத் தந்தையார் வைத்திலிங்கம் தனபாலசிங்கம் அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் நண்பர்கள்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில் தெற்கு
ஸ்ரீநாராயணா அறநெறிப்
பாடசாலை ஆசிரியை
திருமதி பாக்கியலீலா
அரசரத்தினம் அவர்கள்
இந்துசமய, கலாசார
அலுவல்கள்திணைக்களத்தினால்
நடாத்தப்பட்ட அறநெறிப்
பாடசாலை ஆசிரியர்களுக்கான
இந்துசமய அறநெறிக் கல்வி
தேசிய சேவை மேன்மை
விருது பெற்று பாடசாலைக்கும்,
தேவஸ்தானத்திற்கும் பெருமை
தேடித் தந்துள்ளார்.
மென்மேலும் அவர் பணி சிறக்க
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அறநெறிப் பாடசாலை சமூகமும்
தேவஸ்தான பரிபாலன
சபையினரும்.



## ஓராண்டில் நெஞ்சின் நினைவலைகள்!!!



முல்லைத்தீவு மாங்குளம் தச்சடம்பனைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Bern Ketirsatz ஐ வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் தங்கராசா ஜனந்திரன்

அன்னை மடிதனில் 30.01.1992

ஆண்டவன் அடிதனில் 27.02.2022

சீவியத்தைச் சிறப்பாக்கச் சீக்கிரமாய் சுவிஸ்லாந்து
சாதிக்கும் நினைவோடு சம்பாத்தியம் நிறைவோடு
சாந்த சொரூபர் துணையையும் சேர்த்துச் சில மாதங்களில்
சோதித்தானோ இறைவனவன் சோர்ந்து நீயும் அகாலமாக
பாதிப்புற்ற மனையாளவள் பதிலைத்தேடித் துடித்திடவே
வாதம் ஏதும் செய்திடாமல் வல்ல இறைபாதம் சேர்ந்தனையோ!
காலமிருக்குக் கனிந்த நல்ல வாழ்வுமிருக்கக் காலக்கிறுக்கன்
அகாலமாய் அவசரமாய் அழைத்துக் கொள்ள நியாயமென்ன?
உற்றாளவள் சோர்ந்து நிற்க உற்ற உறவும் திகைத்து நிற்க
பெற்றுக் கொண்ட பெருமைகளோடு பெருவாழ்வை
நிறைத்தனையோ!
நற்பேறு நீயாக நாமிருந்து நினைத்திடவே நாங்கள்
பற்றுவிட்டு நீயும் சென்று பருவம் ஓராண்டாச்சே!
ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்
அன்பு மனையாள், அப்பா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், ஆசை உறவுகள்,
தச்சடம்பன், மாங்குளம்.



## Exhibition கண்காட்சி

### நிறைவாழ்வு மையம்

### CENTRE FOR HOLISTIC HEALING

நிறைவாழ்வு மையத்தினால் நடாத்தப்படும் பெண்களுக்கான தொழில்முறைப் பயிற்சி நிலைய மாணவர்களின் ஆக்கங்கள்

- Wool நூலினாலான சிறுவர் ஆடைகள்
- சிறியோர் மற்றும் பெரியோரிற்கான தைத்த ஆடைகள்
- துணியிலான கைப்பைகள்
- கைத்தறி உற்பத்திகள் மற்றும் Batic துணிகள்
- முத்துமாலைகள், வாழ்த்துமடல்கள், கால்மிதிகள்,
- வீடுகளுக்குரிய அலங்காரப் பொருட்கள்
- சிற்றுண்டிகள்

காட்சிப்படுத்துவதுடன் விற்பனைக்கும் விடப்படும்.

அன்புடன் உங்களை எதிர்பார்க்கின்றோம்.

இடம் : நிறைவாழ்வு மையம், மக்லியோட் வைத்தியசாலை வளாகம் கே.கே.எஸ். வீதி, இணுவில் கிழக்கு.

காலம் : 17.02.2023 - 19.02.2023, 9am - 6 pm

தொடர்பு: 077 91 77 230, 021 205 44 43


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 65%....

இலங்கை மின்சார சபைக்கு 287 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டும் வகையில், 65 வீதம் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான திட்டம், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனவரி மாதம் 2ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டதுடன், கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் அதன் உறுப்பினர்கள் பலர் பதவி விலகினார்கள்.

இந்த நிலையிலேயே நேற்றையதினம் இந்தத் திட்டத்துக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனுமதி வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மின்கட்டண....

முடிவுக்கு எதிராக விரைவில் நீதிமன்றத்தை நாடுவேன் என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

24 மணித்தியாலங்களும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க வேண்டுமாயின் வருடாந்தம் 287 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 65 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சாரசபை இலங்கைப் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பான பரிந்துரையை முன்வைத்தது.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை 65 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்தால் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவார்கள். அது சமூகக் கட்டமைப்பில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும். ஆகவே வருடாந்தம் 142 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 36 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்க பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. 36 சதவீத மின்கட்டண அதிகரிப்புத் தீர்மானத்தை இலங்கை மின்சாரசபை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்குள் முரண்பாடுகளை அரசாங்கத் தரப்பினர் ஏற்படுத்தி, ஆணைக்குழுவுக்குள் இணக்கப்பாடற்ற தன்மையைத் தோற்றுவித்துள்ளார்கள்.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், 30, 60 மற்றும் 90 மின்னலகுகள் என்ற அடிப்படையில் மின்சாரத்தைப் பாவிக்கும் பாவனையாளர்களின் மின்கட்டணம் 400 சதவீதத்தால் அதிகரிக்கும்.

சுற்றுலாத்துறை சேவைக்கு ஒரு அலகுக்கு தற்போது அறவிடப்படும் 25 ரூபா 40 ரூபாவாகவும், கைத்தொழிற்சாலைகளிடமிருந்து அறவிடப்படும் ஒரு அலகுக்கான கட்டணம் 50 ரூபாவாகவும் அதிகரிக்கும். எனவே இந்தச் சுமையை மக்கள் மீது சுமத்தப்படுவதைத் தவிர்க்கும் வகையில் விரைவில் நீதிமன்றத்தை நாடுவேன் - என்றார். (அ-ம)

## அடுத்த....

எடுக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

சேதன மற்றும் இரசாயன உர நிறுவனங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளில் இருந்து உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றன என்றும், இது தொடர்பில் பணியாற்றும் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் சிறுபோகத்தில், கடந்த பெரும்போகத்தைவிட குறைந்த விலையில் உரவகைகளைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை விவசாயிகளுக்கு வழங்குவதன் தேவையும் கலந்துரையாடலில் சுட்டிக்காட் டப்பட்டது. அரிசியின் இருப்பு மேலதிகமாகக் காணப்படும் தற்போதைய நிலையில், களஞ்சியசாலைகளில் கையிருப்பில் உள்ள பழைய அரிசியை கால்நடைத் தீவனத்துக்கு விற்பனை செய்வது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (அ-ம)

## அடிகாயத்துக்கு...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொடுக்கல் - வாங்கல் காரணமாக இரண்டு குடும்பங்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டு, அது கைகலப்பு வரையில் சென்றுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைச் சுமுகமாக்கிவிட்டுச் சென்றுள்ளனர். இதன் பின்னர் இரவு 8.30 மணியளவில் இராணுவ உடையில் முகமூடி அணிந்து சென்ற ஆறு பேர் பணம் கொடுத்தவர் மீது சரமாரித் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான நபர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை- இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் பெரியகுளம் - கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த பெண் இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு முறையிடப்பட்டதை அடுத்து அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## தலைசுற்றென...

அவர் தலைசுற்றுகின்றது. உடல் சோர்வாக உள்ளது என்று தனது குடும்பத்தினருக்குத் தெரிவித்து அவர்களையும் அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்புக்கான காரணம் நேற்று மாலை வரையில் கண்டறியப்படவில்லை.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உத்தரவிடப்பட்டது. (அ-ம-18)

## மார்ச் மாதம்....

நடவடிக்கைகள் அவசியம் என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்தது. இதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் சீனாவின் இணக்கம் இன்னமும் உத்தியோகபூர்வமாகப் பெறப்படவில்லை. எனினும், இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான சாதகமான பங்களிப்பை வழங்குவதற்காக சீனா உரிய நாடுகள் மற்றும் நிதியமைப்புகளுடன் இணைந்து செயற்படும் என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங்வென்பின் தெரிவித்துள்ளார்.

இந்தப் பின்னணிலேயே மார்ச் மாதத்துக்கு முன்னர் இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் உத்தியோகபூர்வமான அறிவிப்புக்களை வெளியிடும் என்று ஜனாதிபதி ரணில் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (அ-ம)

## இலங்கைக்....

பாதுகாப்பு ஆலோசகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இலங்கையின் கடற்பாதுகாப்பு தொடர்பான இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. 24 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, 'தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதற்கு பல்வேறு நாடுகளின் உதவி கிடைக்கிறது. இந்த நாடுகளிடமிருந்து தொடர்ந்தும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம்' என்று மிலிந்த மொறகொட தெரிவித்தார். (அ-ம-6)

## யாழ்.போதனாவில்...

றும் மருத்துவமனையின் விடுதியில் தங்கிநின்று சிகிச்சை பெற்று வந்தவர்களுக்கே இவ்வாறு சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனையில் பலருக்குக் காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்தித் தொற்று இருப்பதால் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அது தொடர்பில் மருத்துவமனையின் பணிப்பாளருக்கு அறிவிக்குமாறு கோரும் அறிவித்தல் மருத்துவமனையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குடிதண்ணீரின் ஆரோக்கியமற்ற தன்மையின் காரணமாகவே இந்த நோய் நிலைமை ஏற்பட்டிருக்கலாம் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம-10)

## இந்திய....

சங்க சமாசத் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் எமது மீனவர்களின் பொருளாதாரம் நாளுக்குநாள் மோசமாகி வருகின்றது. இதற்கு காத்திரமானதொரு நடவடிக்கை எடுங்கள் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்தோம். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சரிடம் நாம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தோம். இதற்கு இரண்டு இரும்புக் கப்பலை ஏற்பாடு செய்து தருகின்றேன். அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் கப்பல்களை பிடியுங்கள், இடியுங்கள் என்று கடற்றொழில் அமைச்சர் உசுப்பேற்றினார். ஈழ, தமிழக மீனவர்கள் மோதும் வகையிலான கருத்துக்களைத் தெரிவித்துவிட்டு இப்போது இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்க ஏதுவாக பாஸ் நடைமுறை [illegible]பார்க்கின்றார்கள்.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் வடமாகாண மீனவப் பிரதிநிதிகளை அழைத்து முதலில் பேச்சு நடத்த வேண்டும்.

அதைவிட்டுவிட்டு தான்தோன்றித் தனமான முடிவுகளை எடுத்தால் அரசாங்கத்துக்கு எதிராகவும் அமைச்சருக்கு எதிராகவும் வடக்கு மாகாணத்தில் பெரும் போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-27)

## 4 பொலிஸாருக்கு...

சுற்றிவளைப்பின் போது நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்காகவே பொலிஸார் நால்வருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்றபோது, திஸ்ஸமஹாராம பொலிஸில் கடமையாற்றிய குற்றப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 4 பொலிஸாருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## மனித உரிமை...

இன்று, நாளை, நாளைமறுதினம் என்று மூன்று தினங்கள் கொண்டதாக இந்தச் சுற்றுப் பயணத்தை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். வடமாகாணத்தில் மனித உரிமைகள் தொடர்பான கள நிலைமைகளை ஆராய்வது தொடர்பில் அவர்கள் பல தரப்பினருடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர். (அ-ம)




# திரிபோஷா வழங்கல் தொடர்கிறது சிக்கல்!

கொழும்பு, பெப். 16

சோளத்தில் அஃப்லாடொக்சின் அளவில் ஏற்பட்டுள்ள பிரச்சினை் காரணமாக 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவதில் மீளவும் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனத் திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோஷா தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சோளத்தில் உள்ள அஃப்லாடொக்சின் அளவு ஒரு சதவீதத்துக்கும் குறைவாக இருக்க வேண்டும். ஆனால், நாட்டில் கிடைக்கும் மக்காச்சோளம் குழந்தைகளுக்கான திரிபோஷா தயாரிப்பதற்கு ஏற்ற தரத்தில் இல்லை.

இதனால் குழந்தைகளுக்கு திரிபோஷா தயாரிப்பதில் தொடர்ந்து சிக்கல் நிலை தொடர்கிறது.

அந்தவகையில் அஃப்லாடொக்சின் அளவின் சதவீதங்களை மாற்றியமைப்பதற்காக சுகாதார அமைச்சு மற்றும் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைக்கவசத்தால் தாக்கி கொலை மாணவர்கள் மூவர் கைதாகினர்!

கொழும்பு, பெப். 16

தலைக்கவசங்களால் தாக்கி நபரொருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வலகெதர குருந்திப்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் அளுத்கம, குருந்திபிட்ட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நபரொருவருக்கும் மாணவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதையடுத்து, 16 வயதான 3 மாணவர்கள் குறித்த நபரைத் தலைக்கவசங்களால் தாக்கிக் கொலை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-14-இ)


### வேலையாட்கள் தேவை

யாழ் நகரப் பகுதியில் இருக்கும் உணவகம் ஒன்றிற்கு பெண்(சமையல் ஆள்). உணவு பரிமாறுபவர். காசாளர்(ஓய்வூதியர் விரும்பத்தக்கது)

T.P : 075 357 6995

### வேலைக்கு ஆள்கள் தேவை

Goodmorning பல்பொருள் வாணிபத்திற்கு பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை. (கோண்டாவில்)

077 790 6224, 077 441 3048

### Room வாடகைக்கு

Rooms வாடகைக்கு விடப்படும். இணுவில் மஞ்சத்தடி

076 906 5911/ 077 200 2141

### வேலைவாய்ப்பு!

## வெல்டெர்ஸ்

(ஒட்டு வேலை)

## WELDERS

கோண்டாவிலில் இயங்கி வரும் எமது தொழிற்சாலைக்கு நிரந்தரத் தொழிலாளர்கள் தேவை.

சிறந்த அனுபவமுள்ளவர்கள்
தினமும் 2000/- முதல் 3000/- வரையும்
(வயதெல்லை 30க்குள்).

ஓரளவு அனுபவமுள்ளவர்கள்
தினமும் 1500/- முதல் 2000/- வரையும்
(வயதெல்லை 24க்குள்).

பழக விருப்பமுள்ளவர்கள்
தினமும் 1000/- முதல் 1500/- வரையும்
(வயதெல்லை 20க்குள்).

காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிக்குள் 05 KM சுற்றுச்சூழலில் உள்ளவர்கள் உடனடியாகத் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

ANDRA PRINTERS
379, Kasthuriyar Road, Jaffna.
0772607614 | 0777481696


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
.
12
.
1986



மறைவு
27
.
02
.
2022

### யோகரட்ணம் பிறின்சி

எம் உயிரில் ஒன்றாய் கலந்து
எம் துயரத்தை போக்க வந்தவளே!
ஆனால் எம்மை துயரத்தில் ஆழ்த்தி
விட்டு போனவளே!
ஆண்டுகள் ஒன்று ஆனதம்மா!
உம் பிரிவு தந்த சோகங்கள்,
வடுக்களாய் நெஞ்சமதில் என்ன சொல்லி
ஆறுவது மனதையே எப்போதும் அழியாத
உன் நினைவுகள் நாதமாய் இசைமீட்டி
நிற்குதம்மா என்றும் உந்தன்
நினைவுகளுடன்! ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
யோகரட்ணம் நாகலட்சுமி
யோகரட்ணம் அஜித், யோகரட்ணம் சஜீவ் குடும்பத்தினர்
மெமோறியல் வீதி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

(cs 23336) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
28
.
04
.
1972



இறப்பு
15
.
02
.
2023

### முத்துலிங்கம் செட்டியார் இராஜாராம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் செட்டியார் இராஜாராம் நேற்று (15.02.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் செட்டியார் பரமரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குருசுமுத்து அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் (செல்வி) அன்புக் கணவரும், சாயிமா, டக்ஷாயினி (மீனா), லிங்காயீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமர்நாத்லிமா அவர்களின் மாமனாரும் உமைஷாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் கொட்டடி வில்லூண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

236/5, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3343

தகவல்:
குடும்பத்தினர்.

(cs23368) (2.6)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
03.03.1930

மறைவு
18.01.2023

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### காசிப்பிள்ளை சதாசிவம் [சிவதொண்டர்]

(முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர் – கோயில் வீதி, அத்தியடி)

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை கடந்த (15-02-2023) புதன்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (17-02-2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
லோகேஸ்வரன் - +94762293944
தீபன் - +94773060907

குடும்பத்தினர்
127/10, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 23369)(3/6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org